**இலங்கை மத்திய வங்கி**

**வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**

**2020 மார்ச்சு 10** **சுற்றறிக்கை** **2020இன் 1ஆம் இலக்கம்**

**பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான கொடுகடன் ஆதரவு**

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துகின்ற நோக்குடன் வங்கித்தொழில் துறையின் தகைமையுடைய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் கடன்பாட்டாளர்களுக்காக சிறப்புக் கொடுகடன் ஆதரவுத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையின் கடன்பாட்டாளர்களுக்கும் அதேபோன்ற திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்ற விதத்தில் சனாதிபதி செயலகத்தில் நிதியியல் துறையின் பிரதிநிதிகளுக்கும் சனாதிபதியின் செயலாளருக்குமிடையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இலங்கை மத்திய வங்கிக்கும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் துறையின் பிரதிநிதிகளுக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறை முழுவதிலும் இணக்கமானதொரு விதத்தில் இத்திட்டத்திற்கு காத்திரமான தன்மையினை வழங்குவதற்கான வழிகாட்டல்களை இச்சுற்றறிக்கை கொண்டிருக்கிறது.

**1. பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும்**

**(i)** **தகைமையுடைய கடன்பாட்டாளர்கள்**: உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும், 2019.12.31 அன்று உள்ளவாறு ஏற்கனவே செயற்படாதவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளனவும் தமது வியாபார நடவடிக்கைகளுக்காகத் தொடர்பான வியாபார அதிகாரசபையுடன் பதிவுசெய்து கொண்டுள்ளவையுமான, வருமான உருவாக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் தனிப்பட்டவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் சிறப்புக் கொடுகடன் ஆதரவுத்திட்டத்தினை வழங்க முடியும்.

**(ii)** முடிவுறுத்தப்பட்டு கைவிடப்பட்ட அல்லது முடிவுறுத்தப்பட்டு நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் இக்கொடுகடன் ஆதரவுத்திட்டம் ஏற்புடைத்தாகமாட்டாது.

**(iii)** 2020.03.31 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அத்தகைய கடன்பாட்டாளர்களினால் விடுக்கப்பட்ட எழுத்து மூலமான கோரிக்கையினை அடுத்து அனைத்துத் தகைமையுடைய கடன்பாட்டாளர்களுக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் கொடுகடன் ஆதரவுத்திட்டத்தினை வழங்கும்.

**(iv)** கீழேயுள்ள பிரிவு 2 மற்றும் 3இல் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு மீள்அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகளின் கீழ் தவணைப் பணத்தினைச் செலுத்தத் தவறிய கடன்பாட்டாளர்கள் இத்திட்டத்தின் நன்மைகளை[1] அனுபவிக்க தகைமையற்றவர்களாவதுடன் இத்திட்டத்தின் பங்கேற்பாளர்களாகவும் கருதப்படமாட்டார்கள்.

**(v)** திட்டத்தின் தொழிற்பாட்டு விபரங்கள் பிரிவு 2 இலிருந்து 5 வரை தரப்பட்டுள்ளன.

---

[1] தண்ட வட்டி வீதம் மற்றும் பிற்போடப்பட்ட வட்டி வீதத்தின் தள்ளுபடி, மூலதனச் சட்ட ரீதியான இசைவுத்தாமதம்

## 2. **குத்தகை மற்றும் தவணைக் கொள்வனவு வசதிகள்**

**(i)** மொத்த ஒன்றுசேர்ந்த தண்ட வட்டியும் செலுத்தப்படாதவைகளும் தள்ளுபடி செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், (தண்ட வட்டி வீதங்கள் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர்) செலுத்தத் தவறிய தவணைப் பணத்தின் ஒன்றுசேர்ந்த மற்றும் செலுத்தப்படாத வட்டியில் 10 சதவீதத்தினை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் தீர்மானிக்கப்படக்கூடிய திகதி வரை இத்திட்டத்தின் கீழ் பிற்போடலாம். பிற்போடப்பட்ட வட்டி வீதத்தினை, கீழேயுள்ள பிரிவு 2 (ii)இல் தரப்பட்டுள்ள முறையில் மீள்அட்டவணையிடப்பட்ட கடன்களை கடன்பாட்டாளர் தீர்ப்பனவு செய்ததன் பின்னர் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் தள்ளுபடி செய்யலாம்.

**(ii)** **குத்தகைக்குவிடல் மற்றும் தவணைக் கொள்வனவு வசதிகளின் மீள்அட்டவணைப்படுத்தல் பின்வருமாறு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்:** வெளிநின்ற மூலதன நிலுவை, செலுத்தத் தவறிய தவணைகளின் வட்டியின் மீதிப் பங்கு மற்றும் எதிர்கால வட்டி என்பனவற்றை மீள்அட்டவணையிடல் வேண்டும்.

(அ) கடன்பாட்டாளர் ஆரம்ப மூலதனத்தில் 50 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கினை மீளச்செலுத்தியிருக்குமிடத்து, செலுத்தத் தவறிய தவணைப் பணத்தின் வட்டியின் மீதித் தொகை, எதிர்கால வட்டி மற்றும் வெளிநின்ற மீதி மூலதனம் என்பன மீளஅட்டவணையிடப்பட்டு, ஆரம்ப மூலக் கடனின் முதிர்ச்சிக் காலத்திற்கு எஞ்சியுள்ள காலத்தின் இரு மடங்கு காலத்திற்குள் அல்லது நான்கு ஆண்டுகள் இதில் எது குறைவானதோ அக்காலத்திற்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) கடன்பாட்டாளர் ஆரம்பக் கடனில் 50 சதவீதத்திற்குக் குறைவாக ஆனால் 25 சதவீதத்தினையாவது செலுத்தியிருப்பின் செலுத்தத் தவறிய தவணைப் பணத்தின் வட்டியின் மீதிப் பங்கு, எதிர்கால வட்டி மற்றும் வெளிநின்ற மீதி மூலதனம் என்பன மீள அட்டவணையிடப்பட்டு ஆரம்ப மூலக் கடனின் முதிர்ச்சிக் காலத்திற்கு எஞ்சியுள்ள காலத்தின் இரு மடங்கு காலத்திற்குள் அல்லது ஐந்து ஆண்டுகள் இதில் எது குறைவானதோ அக்காலப்பகுதிக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

## 3. **குத்தகைக்குவிடல் மற்றும் தவணைக் கொள்வனவு வசதிகள் நீங்கலான கொடுகடன் வசதிகள்**

**(i)** **கொடுகடன் வசதிகளுக்கான மூலதன சட்டஇசைவுத் தாமதம் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:**

(அ) குத்தகை/ தவணைக் கொள்வனவு வசதிகளைப் பெற்றுக்கொண்ட கடன்பாட்டாளர்கள் தவிர்ந்த, கொடுகடன் வசதிகளுக்கு தகைமையுடைய வாடிக்கையாளர்கள், பிரிவு 3இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்களின் மூலதன மீள்கொடுப்பனவுகளுக்காக ஆறு மாத கால சலுகைக் காலமொன்றிற்கு தகைமையுடையவர்களாவர்.

(ஆ) கொடுகடன் ஆதரவுத்திட்டக் காலப்பகுதியில், கடன்பாட்டாளர்கள் இத்திட்டத்திற்கு ஏற்புடைத்தான நிபந்தனைகளுக்கிணங்க, சரியான நேரத்தில் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகள் மீது வரவேண்டிய வட்டியைத் தொடர்ந்தும் தீர்ப்பனவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படல் வேண்டும்.

**(ii)** ஒன்றுசேர்ந்த மொத்தத் தண்ட வட்டியும் செலுத்தப்படாதவைகளும் தள்ளுபடி செய்யப்படல் வேண்டும் என்பதுடன் (தண்ட வட்டி வீதம் தள்ளுபடி செய்யப்பட்டதன் பின்னர்) செலுத்தத் தவறிய தவணைப் பணத்தின் செலுத்தப்படாத வட்டியில் 10 சதவீதத்தினை இத்திட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் பரிசீலிக்கப்படக்கூடிய ஒரு திகதி வரை பிற்போடப்படலாம். பிற்போடப்பட்ட வட்டி வீதத்தினை உரிமம்பெற்ற நிதிக் கம்பனி/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள், கீழேயுள்ள பிரிவு 3 (iii)இன் கீழ், வழங்கப்பட்ட முறையில் மீள்அட்டவணையிடப்பட்ட கடன்களை கடன்பாட்டாளர் தீர்ப்பனவு செய்ததன் பின்னர் தள்ளுபடி செய்யலாம்.

**(iii) கொடுகடன் வசதிகளை மீள்அட்டவணைப்படுத்தல் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:** வெளிநின்ற மூலதன நிலுவை, செலுத்தத் தவறிய தவணைப் பணத்தினது வட்டியில் மீதிப் பங்கு, எதிர்கால வட்டி என்பன மீள்அட்டவணைப்படுத்தப்படல் வேண்டும்.

(அ) ஆரம்ப மூலதனத்தில் 50 சதவீதத்தினை அல்லது அதற்கும் கூடுதலான தொகையினை கடன்பாட்டாளர் மீளச் செலுத்தியிருக்குமிடத்து செலுத்தப்படாத தவணைப் பணத்தினது வட்டியின் நிலுவைப் பங்கு, எதிர்கால வட்டி மற்றும் வெளிநின்ற மூலதன நிலுவை என்பன மீள்அட்டவணைப்படுத்தப்படல் வேண்டுமென்பதுடன் ஆறு மாத சலுகைக்கால முடிவில் ஆரம்பக் கடனின் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதியின் இரு மடங்கு காலப்பகுதிக்குள் அல்லது நான்கு ஆண்டுகளுக்குள் இதில் எது குறைவானதோ அக்காலப்பகுதிக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) கடன்பாட்டாளர் ஆரம்ப மூலதனத்தில் 50 சதவீதத்திற்கும் குறைவாக ஆனால் குறைந்தபட்சம் 25 சதவீதத்தினை மீளச் செலுத்தியிருக்குமிடத்து, செலுத்தப்படாத தவணைப் பணத்தினது வட்டியின் நிலுவைப் பங்கு, எதிர்கால வட்டி மற்றும் வெளிநின்ற மூலதன நிலுவை என்பன மீள்அட்டவணைப்படுத்தப்படல் வேண்டுமென்பதுடன் ஆறு மாத சலுகைக்கால முடிவில் ஆரம்பக் கடனின் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதியின் இருமடங்கு காலப்பகுதிக்குள் அல்லது ஐந்தாண்டுகளுக்குள் இதில் எது குறைவானதோ அக்காலப்பகுதிக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

4. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் அத்தகைய கொடுகடன் ஆதரவுத்திட்டத்தினை வழங்கும் பொழுது அதற்குச் சான்றாகத் தேவையான ஆவணங்களைப் பேணுதல் வேண்டும்.

5. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் கடன்பாட்டாளர்களினால் பயன்படுத்தப்படும் சிறப்புக் கொடுகடன் திட்டத்தினை இணைப்பு I இல் உள்ள படிவத்திற்கிணங்க, பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு ஒவ்வொரு மாதமும் 15 மற்றும் 30ஆம் திகதிகளில் உள்ளவாறு 2020.04.30ஆம் திகதியிலிருந்து தொடங்கும் 5 வேலை நாட்களுக்குள் அறிக்கையிடுதல் வேண்டும்.

**ஒப்பம்**

ஜே. பி. கமலத்

*பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல்*

*நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம்*

**இணைப்பு I**

## 2020இன் 1ஆம் இலக்கச் சுற்றறிக்கை

## சிறப்புக் கொடுகடன் ஆதரவுத்திட்டம் கிடைக்கின்ற கடன்பாட்டாளர்களின் விபரங்கள்

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனி/ சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனியின் பெயர்: .............................**

ரூ.000’

| தொடர் இல. | ஒப்பந்த இல. | கடன் பாட்டாளரின் பெயர் | வெளிநின்ற தொகை (2019.12.31இல் உள்ளவாறு) | கொடுகடன் ஆதரவுத்திட்டம் பரிசீலிக்கப் பட்டது அல்லது பரிசீலிக்கப் படவில்லை (இல்லையெனின் காரணத்தைக் குறிப்பிடுக) | தள்ளுபடி செய்யப்பட்ட தண்ட வீதத் தொகை | பிற்போடப் படுவதற்கான ஒன்றுசேர்ந்த வட்டித் தொகை | மீள்அட்டவணைப் படுத்தப்பட்ட கடன்களின் விபரங்கள் | | குறிப்புக் கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | மீள்கொடுப்பனவுக் காலம் | வட்டி வீதம் | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

2020.04.30 இலிருந்து 5 வேலை நாட்களுக்குள் ஒவ்வொரு மாதமும் 15ஆம் மற்றும் 30ஆம் திகதியிலுள்ளவாறான விபரங்களை தயவுசெய்து snbfidb@cbsl.lk இற்கு மின்னஞ்சல் செய்யவும்.